ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் - 2021

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்த 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின்

தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றன எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 நிதிக்கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட அனைத்து வருமானங்களும் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் பிணை முறி உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து 2021 ஆம் ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்த ரூபா 7,126,683 தொகை மற்றும் அந்த தொகையை முதலீடு செய்தமையால் கிடைத்த வட்டி வருமானம் ரூபா 1,129,608 ஆக ரூபா 8,256,291 கூட்டுத்தொகை நிதி செயலாற்றல் கூற்றிற்கு உள்ளடக்கப்படாமையால் மீளாய்வாண்டின் மிகையானது ரூபா 8,256,291 இனால் குறைத்து காண்பிக்கப்படுகிறது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 737 இன் பிரகாரம் பிணைமுறி உடன்படிக்கையை மீறியதால் குறித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படும் பணத்தை வருமானத்திற்கு எடுத்தல் தொடர்பில் குறிப்பிடப்பட்டிராததுடன் கிடைக்கும் பணத்தை முதலீடு செய்வதற்கு பொருத்தமான செலவினங்களை மேற்கொள்ளுதல் தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வட்டி வருமானத்தினை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த 15 கட்டிடங்களின் மொத்த கிரயம் ரூபா 593,944,192 மூலதனமாக்கப்பட்டிராத காரணத்தால் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் அத் திகதியில் உள்ள படியான நடைமுறை பணிகள் அதற்கு சமனான பெறுமதியினால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வு ஆண்டிற்கான கட்டிட பெறுமானத் தேய்வு ரூபா 12,010,316 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் அவ் ஆண்டிலேயே மூலதனம் ஆக்குவதற்கும் அதற்கான உரிய பெறுமானத்தேய்விடுவதற்கும் குறித்த ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | நிர்மாணங்கள் பயன்பாட்டிற்கு உகந்த நிலையை அடைந்ததன் பின்னர் அதன் கிரயம் சொத்தாக கணக்கு வைக்கப்பட வேண்டியதுடன் அதற்குரிய பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான பிணைமுறி உடன்படிக்கையை மீறியமைக்காக 03 பேராசிரியர்களிடமிருந்து | பிணைமுறி உடன்படிக்கையை மீறியமைக்காக அறவிடப்பட வேண்டிய அனைத்து | பிணைமுறி உடன்படிக்கையை மீறியமையால் பல்கலைக்கழகத்திற் |

| | | |
|---|---|---|
| அறவிடப்பட வேண்டிய ரூபா 18,243,844 தொகை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பணமும் எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | கு அறவிடப்பட வேண்டிய பணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------- | ---------------------------------- | ------------ |
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் பொது திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு உரியதாக பல்கலைக் கழக பதவி அணியின் 186 உத்தியோகத்தர்களுக்கு வீட்டு வாடகையாக ரூபா 54,020,257 செலுத்தப்பட்டிருந்தது. | வீட்டு வாடகை படிகளை வழங்குவதற்காக அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு 2022 ஜனவரி 12 ஆம் திகதி கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை | வீட்டு வாடகைப்படிகளை செலுத்துவதற்காக அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்திற்கு நாளாந்தம் நிறைவேற்ற வேண்டிய பொறியியல் சார் பணிகள் காணப்படாத போது மற்றும் பல்கலைக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் காணப்படாத பொறியியலாளர் பதவி ஒன்றிற்காக 2015 டிசம்பர் 02 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் 06 மாத காலப்பகுதிக்காக ரூபா 50,000 ஆன மாதாந்த படி ஒன்றினை செலுத்தும் அடிப்படையில் ஊவா மாகாண கட்டிட பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதான பொறியியலாளர் ஒருவர் இடை காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார் சேவை காலத்தினை தொடர்ச்சியாக நீடித்து 2018 ஜுன் 01 ஆம் திகதி முதல் ரூபா 75,000 படியான மாதாந்த படி வரையிலும் அதிகரித்து காண்பிக்கப்பட்டு இருந்தது. அதற்கமைய 2015 டிசம்பர் | அவ் உத்தியோகத்தரினால் செயற்திட்ட முகாமையாளருக்கு உரிய கடமைகள் நிறைவேற்றப்படுவதுடன் அப்பதவி 2017 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரிய பதவி ஒன்றாகும். அவரினால் செயற்திட்டங்களின் நிர்மாணப்பணிகள் கண்காணிக்கப்படுவதுடன் அவருக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது குறித்த செயல் திட்டங்களின் மதியுரை சேவைகளுக்கான பணத்திலே ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரிய பதவிகளுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு இடம்பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக ரூபா 4,650,000 ஆன தொகை செலுத்த பட்டிருந்த போதிலும் உத்தியோகத்தர் மாதாந்தம் நிறைவேற்றிய பணிகள் தொடர்பிலான அறிக்கையொன்று பல்கலைக் கழகத்திடம் காணப்படவில்லை. | | |
| (இ) | பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான 29.805 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியை கையகப்படுத்தலை துரிதப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தற்ற 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ஓய்வு பெற்ற காணி ஆணையாளர் ஒருவருக்கு காணிகளை சுவீகரிக்கும் மதியுரையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். 2021 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் நான்கு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்து இருந்தபோதிலும் காணிகளை சுவீகரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராதுடன் ரூபா 2,750,000 கூட்டுத்தொகை அவருக்காக செலவிடப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டார். அவரால் அந்த காணிகளின் உரித்து தொடர்பில் பல்வேறு தகவல்கள் கோவைப்படுத்தப்பட்டு அக் காணிகளை சேகரிக்கும் பணிகள் பெரும்பாலானவை இறுதிக் கட்டம் வரையிலும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை. | அங்கீகரிக்கப்பட்ட பதவிக்குரிய பதவிகளுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2010 ஏப்ரல் 23 ஆம் திகதிய 921 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் சிரேஷ்ட உதவி நூலகர் பதவிக்காக காணப்பட வேண்டிய தகைமைகளை பூர்த்தி செய்திராத விண்ணப்பதாரி ஒருவர் 2018 ஜூலை 25 ஆம் திகதி முதல் அப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அத் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் ரூபா.10,072,409 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | சிரேஷ்ட உதவி நூலகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் உரிய முறையிலேயே இடம்பெற்றுள்ளதுடன் அதற்கு தேவையான நிபுணத்துவ அறிவுடைய தெரிவுக் குழு ஒன்றின் ஊடாகவே கறித்த விண்ணப்பதாரியின் தகைமைகள் கருத்திற் கொள்ளப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை. | பதவிக்குரிய தகைமைகள் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். |

## 1.5.4 பொருத்தமான மதிப்பீடு மற்றும் மதிப்பீடு செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 / 2021 ஆம் ஆண்டுக்காக பல்கலைக்கழகத்திற்கு பாதுகாப்பு சேவைகளை பெற்றுக்கொள்ளும் பெறுகையில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் நாளாந்த ஆகக்குறைந்த அடிப்படை சம்பளம் கணிப்பிடப்பட்டு அதற்கமைய ஒவ்வொரு விலைகேள்வியும் மதிப்பீடு செய்யப்படாது முதலாவது மற்றும் இரண்டாவது ஆகக் குறைந்த விலை கேள்விகள் எவ்வித அடிப்படையும் இன்றி நிராகரிக்கப்பட்டிருந்தன.<br>மூன்றாவது ஆகக்குறைந்த விலை கேள்வியினை சமர்ப்பித்திருந்த கம்பெனிக்கு ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு பரிந்துரைத்து ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த காரணத்தால் 2020 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக ரூபா.2,634,989 ஆன பாதுகாப்பு சேவை வழங்களுக்கு கூடுதலான கொடுப்பனவு ஒன்று இடம்பெற்றிருந்தது. | முதலாவது ஆகக்குறைந்த விலை கேள்வியாளர் சம்பளத்தை கணிப்பிடும் விதத்தினை சமர்ப்பித்திராததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கோரிக்கை மற்றும் பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சம்பளம் கணக்கிடப்படும் விதத்தினை இந்நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த கணிப்பிடப்படும் முறை குறித்த நிறுவனத்தினால் 2020 ஆகஸ்ட் 07 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் ஆகக் குறைந்த விலை கேள்வியாவது மூன்றாவது ஆகக்குறைந்த விலை கேள்வியாளரே என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நிதி நட்டம் ஒன்று பல்கலைக்கழகத்திற்கு நேரிடவில்லை என்பது | பெறுகை நடைமுறையின் போது பல்கலைக்கழகத்திற்கு நட்டம் ஒன்று ஏற்படாத வகையில் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை<br>ரூபா | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதி ஒழுங்குவிதிக் கோவை** | | | |
| நிதிப்பிரமாணம் 571 | பல்வேறு நிறுமாணங்கள், வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான பிடிக்காசாக காணப்பட்ட 02 வருடங்களை விஞ்சிய ரூபா 41,848,552 விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு நிறுமாணங்கள், வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது பிடிக்காசாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த 02 வருடங்கள் விஞ்திய ரூபா 41,848,552 தொகையான வைப்புகள் குறித்த இறுதி பற்றுச்சீட்டுகள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை** | | | |
| (i) V அத்தியாயத்தின் 7.6 பந்தி | 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பிணைமுறி உடன்படிக்கையை மீறிய காரணத்தால் 06 பேராசிரியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.32,827,523 தொகையினை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | 2022 ஆம் ஆண்டினுள் ரூபா 7,020,196 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | பிணைமுறி உடன்படிக்கையை மீறியமைக்குரிய பணத்தை அறவிடும் நடைமுறை செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | X அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பந்தி. XX அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக கல்விசார் பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதி செய்யப்படாது மீளாய்வாண்டினுள் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 627,890,669 செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக கட்டமைப்பினுள் கல்விசார் பதவியணியின் உத்தியோகத்தர்களுக் காக கையொப்பமிடும் இடாப்பு அல்லது கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தல் இடம்பெறாததுடன் கல்விசார் பதவியணியின் விரிவுரைகளுக்கு வழங்கப்படும் கால அட்டவணைகளுக்கு இணங்கவே விரிவுரைகள் நடத்தப்படுகின்றன. அந்த விரிவுரை அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கல்விசார் பதவியணியின் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளமை உறுதி செய்து கொள்ளப்படுகின்றது என்பது | பல்கலைக்கழக தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரசு கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் 2019 ஜூலை 25 ஆம் திகதிய SC&PMU/Grant/19 ஆம் இலக்க வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் சுற்றறிக்கை. | வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் அறிவுறுத்தல் மற்றும் இணக்கப்பாட்டினை பெற்றுக் கொள்ளாது தெற்காசியாவின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பல்கலைக்கழக வியாபார ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்காக நிலைபேறான சுற்றுலாத்துறையின் விசேடத்துவ மத்திய நிலையத்தின் (CESTour) ஆராய்ச்சி செயற்றிட்டத்திற்காக ஐரோப்பிய சங்கத்தின் உயர்கல்வி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து மீளாய்வாண்டினுள் ரூபா.4,217,177 பல்கலைக்கழகத்திற்கு நேரடியாகப் | அந்த நிதி உடன்படிக்கையின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு ள்ளதுடன் 2022.06.01 ஆம் திகதி UWU/FD/B/2022/09 ஆம் இலக்கமுடைய கடிதத்தின் மூலம் பல்கலைக்கழகத்திற்கு 2021 ஆம் ஆண்டுக்காக நேரடியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் தொடர்பில் திறைசேரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது டன் அதன் பிரதி ஒன்று வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிநாட்டு மானியங்கள் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தி ன் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2019 நவம்பர் 25 ஆம் திகதிய 09/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு உரித்துடைய உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் 10 சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக உபவேந்தரின் உத்தியோகபூர்வ இல்ல கட்டணங்கள் அறவிடப்பட்டிராததுடன் ஏனைய சிரேஷ்ட பதவியணியின் உத்தியோகபூர்வ இல்லங்களில் வதியும் உத்தியோகத்தர்களிடம் இருந்து மாதாந்தம் ரூபா 2,000 மற்றும் உத்தியோகபூர்வ இல்ல கட்டிடத் தொகுதியின் (Studio Apartment) வதியும் உத்தியோகத்தர்களிடமிருந்து மாதாந்தம் ரூபா 1,000 எனும் மிகவும் குறைந்த அளவிலான வாடகை அறவிடப்பட்டிருந்தது. | உபவேந்தரின் உத்தியோகபூர்வ இல்லம் அவரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு மாத்திரமல்லாது பல்கலைக்கழகத்திற்கு வருகைதரும் தூதுவர்கள், ஏனைய பல்கலைக் கழகங்களின் உபவேந்தர்கள் மற்றும் அரச தலைவர்கள் ஆகிய அனைவருக்கும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் அரசினால் வெளியிடப்பட்டுள்ள "உழைக்கும் போது செலுத்தும் வரி" மூலம் அவர்களுக்கு வழங்கப்படும் இல்லங்கள் மற்றும் வாகனங்களுக்காக வரி தொகை ஒன்று அறவிடப்படுகின்றமையால் 2019 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன சுற்றறிக்கை இலக்கம் 9/2019 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிநார் மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 142,962,594 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு எதிர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 31,334,498 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா 174,297,092 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 368,646 கூட்டுத்தொகை ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலமாகவும் மரணமடைந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 163,500 ஆன இடர் கடன் மீதி 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ரூபா.368,646 ஆன நிலுவை கடன் மீதி ஒன்று தொடர்ந்தும் அறவிடபட வேண்டியதாக காணப்பட்டது. மரணமடைந்த பெண் உத்தியோகத்தர் ஒருவரின் நிலுவை இடர்கடன் மீதி நலன்புரி நிதியத்திலிருந்து அறவிடப்படுவதாக தெரிவித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனினும் அதற்கான முறையான பதில் ஒன்று கிடைக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடன் தொகையை அளவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவருக்கு சீனாவின் சியாமன் பல்கலைக்கழகத்தின் (Xiamen University) முனைவர் பட்டப்படிப்பை (Ph.D) மேற்கொள்வதற்காக 2015 செப்டெம்பர் 25 ஆம் திகதி முதல் 2018 செப்டம்பர் 24 ஆம் திகதி வரையான 03 வருட காலத்திற்காக சம்பளத்துடனான கல்விசார் விடுமுறை மற்றும் விடுமுறை நிறைவடையும் திகதி முதல் 2019 ஜுலை 24 ஆம் திகதி வரையிலும் சம்பளமற்ற கல்விசார் விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த பேராசிரியரின் சம்பளத்துடனான கல்விசார் விடுமுறை மற்றும் புலமைப்பரிசிலிற்காக ரூபா 7,191,549 பல்கலைக்கழகத்தினால் செலவிடப்பட்டுள்ள போது முனைவர் பட்டப்படிப்பினை நிறைவு செய்யாது 2019 ஜுலை 11 ஆம் திகதி முதல் சேவைக்கு அறிக்கையிட்டிருந்தார். | இது தொடர்பில் முறையான விசாரணை மேற்கொண்டு 2020 நவம்பர் 11 ஆம் திகதி பதிவாளரின் கையொப்பத்துடன் குறித்த பேராசிரியருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலாக கலாநிதி பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த சான்றிதழை கையளிப்பதற்கு 2021 டிசம்பர் மாதம் வரையிலும் காலம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அத் திகதி வரையிலும் அதனை கையளிப்பதற்கு முடியாது இருப்பின் அவருக்கு பிணைமுறியை மீறிய நபர் ஒருவராக கருதுவதற்கு தொடர்ந்தும் தீர்மானிக்கப்பட்டது. | உரிய காலத்தில் பேராசிரியர் பட்டப் படிப்பினை நிறைவு செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2006 செப்டம்பர் 26 ஆம் திகதி முதல் உபவேந்தரின் நியமனக் கடிதத்தின் மூலம் விலங்கியல் விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயப் பீடத்தின் தற்காலிக உதவி பேராசிரியர் பதவிக்காக பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருந்ததுடன் 2007 ஏப்ரல் 18 ஆம் திகதி உபவேந்தரின் நியமனக் கடிதத்தின் மூலம் 2007 மே 01 ஆம் திகதி முதல் பேராசிரியர் (தகுதிகாண்) பதவிக்காக நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அந்த பேராசிரியர் சிரேஷ்ட பேராசியரியர் II தரத்திற்காக பதவி உயர்த்துவதற்கு உரிய தகைமைகளை பூர்த்திசெய்திராத போது 2012 ஏப்ரல் 30 ஆம் திகதி அப்பதவிக்கு பதவி உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை மற்றும் இரு சந்தர்ப்பங்களில் சமர்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதில்கள் அனுப்பப்பட்டிராமை மற்றும் 2015 ஜுலை 14 ஆம் திகதிய கட்டுப்பாட்டுச் சபையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தெளிவுபடுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என தீர்மானித்திருந்த போது உபவேந்தரின் 2015 ஒக்டோபர் 05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இப் பேராசிரியர் 2012 மே 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிரேஷ்ட விரிவுரையாளர் II தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு இருந்தார். | 2015.08.26 ஆம் திகதிய பல்கலைகழகத்தின் 103 வது கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தில் அவரின் பதவி உயர்வு தொடர்பில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.<br>• 2013/1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் அவரின் சிரேஷ்ட விரிவுரையாளர் II தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கு தீர்மானம் எடுப்பதற்கு முடியாது இருந்தமை மற்றும் அந்த அவர் இரு வருடங்களில் கலாநிதி பட்ட பாடநெறியை கற்றுள்ளதுடன் அவரின் பாடநெறியின் ஆராய்ச்சி அலகுகளும் உள்ளடங்கியுள்ளமையால் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 721 இன் (1) பகுதியில் உருப்படி இலக்கம் 7 இன் பிரகாரம் அவர் சிரேஷ்ட விரிவுரையாளர் II தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை. மேலும் அந்த கட்டுப்பாட்டு சபையினால் மேற்படி பதவி உயர்வு தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பி வைப்பதற்கு அவசியமற்றது என்பது தீர்மானிக்கப்பட்டது. | பதவி உயர்வு மற்றும் நியமனங்களுக்கான பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2007 ஜூன் 14 ஆம் திகதிய உபவேந்தரின் நியமனக் கடிதத்தின் மூலம் 2007 ஜூலை 01 ஆம் திகதி முதல் முகாமைத்துவ பீடத்தில் தற்காலிக விரிவுரையாளர் பதவிக்காக பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருந்ததுடன் பின்னர் 2008 ஜூலை 02 அம் திகதிய உபவேந்தரின் நியமனக் கடிதத்தின் மூலம் 2008 ஜூலை 15 ஆம் திகதி முதல் விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவிக்காக நியமனம் வழங்கப்பட்டிருந்தது. 2019 ஜூன் 07 ஆம் திகதிய உபவேந்தரின் கடிதத்தின் மூலம் 2013 ஜூலை 15 ஆம் திகதி முதல் சிரேஷ்ட விரிவுரையாளர் II பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டிருந்தார். எனினும் பதவி உயர்வு வழங்கி 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இப் பேராசிரியர் இந்தியாவின் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட அடிப்படை பட்டம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமா என்பது மற்றும் கல்விசார் தகைமைகள் கணக்காய்வுத் திகதியான 2022 ஜனவரி 22 ஆம் திகதி வரையிலும் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை . | 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதி இடம்பெற்ற 95வது கட்டுப்பாட்டுச் சபைக்கு அவரின் ஆரம்ப ஆட்சேர்ப்பு தொடர்பில் நிலவிய சிக்கல் தொடர்பில் மெமோ பத்திரம் ஒன்று முன்னாள் மனிதவள பிரிவில் சேவையாற்றிய சிரேஷ்ட உதவி பதிவாளர் இனால் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. பின்னர் அவர் 2018 டிசம்பர் 27 ஆம் திகதி Dalian பல்கலைக்கழகத்தின் PhD in Enterprise Management பட்டப்படிப்பினை பூர்த்தி செய்துள்ளதுடன் 2019 பிப்ரவரி 26 ஆம் திகதி அந்த பட்டப் படிப்பினை சான்று படுத்துவதற்காக Dalian பல்கலைக்கழகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. மீண்டும் அவர் 2019 ஜனவரி 29 ஆம் திகதி அவரின் சிரேஷ்ட விரிவுரையாளர் (II தரம்) பதவிக்காக விண்ணப்பம் அனுப்பி இருந்தார். அதற்கமைய அவருக்கு 2013 ஜூலை 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவருக்கு சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II) பதவிக்கு நியமிக்கப்பட்டார். அதற்கான தெரிவுக்குழு 2019 ஏப்ரல் 24 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்தது. மேலும் 2020 ஒக்டோபர் 05 ஆம் திகதி அவரின் அடிப்படை பட்டம் தொடர்பில் சான்று படுத்துவதற்கு பெங்களூர் பல்கலைக்கழகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றுக்கு பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் சேர்க்கப்பட்டு 03 மாத காலத்தினுள் இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் உரிய நிறுவனங்களிலிருந்து சான்றுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 15 பட்ட பாடநெறிகளுக்கு 1589 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் 1232 மாணவர்கள் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்பட்டு இருந்ததுடன் எதிர்பார்த்த மாணவர்களின் எண்ணிக்கையில் 357 | 2020/2021 மாணவர் குழுவிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்வதற்காக மாணவர்களின் பட்டியல் ஒன்று அனுப்பப்பட்டதுடன் அந்த பட்டியல்களுக்கு உரிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை | உரிய திட்டங்களின் பிரகாரம் மாணவர்களை இணைத்துக் கொண்டு மாணவர்களின் இயல் அளவை முழுமையாக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாணவர்கள் குறைவாக இணைத்துக்கொள்ள பட்டமையால் முழுமையான இயல் அளவினையும் பயன்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் தவறு இருந்தது. | எடுக்கப்பட்டுள்ளது. எனினும் சில மாணவர்கள் பதிவு செய்திராததுடன் பதிவு செய்த சில மாணவர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுரையின் அடிப்படையில் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றி அனுப்பப்பட்டனர். இவ்வாறான பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் எதிர்பார்த்த மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. | |
| (ஈ) | வெளிவாரி விடுதியை வாடகைக்கு வழங்குவதற்கு உரிய விலை கேள்வி அழைப்பில் குறித்த விண்ணப்பப் பத்திரத்துடன் வாடகைக்கு வழங்கப்படும் வீட்டிற்காக 06 மாதங்களினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை ஒன்று விலைக் கேள்விப் பத்திரத்துடன் வழங்கப்பட வேண்டிய போதிலும் வாடகைக்கு எடுப்பதற்கு தெரிவு செய்த விண்ணப்பதாரிகளின் 14 விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பில் அவ்வாறு மதிப்பீட்டு அற்க்கை ஒன்று முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டிருந்த 14 வெளிவாரி விடுதிகளுக்காக செலுத்தப்படும் மாதாந்த வாடகை நியாயமான பெறுமதியா என்பதனை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | வீடுகளின் வாடகையை மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மற்றும் ஒரு மாணவருக்காக பல்கலைக்கழகத்தினால் கணக்கிடப்பட்ட தொகை மற்றும் அதனைவிட பொருளாதார இலாபம் உள்ள வீட்டு வாடகையினை அடிப்படையாக கொண்டு பெற்றுக் கொள்வதற்கு பெறுகைகள் குழு தீர்மானித்துள்ளது. அவ்வாறே இக்காலப்பகுதியில் உரிய நேரத்தில் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள முடியாமையால் பெறுகை நடைமுறையை தாமதிக்காது மேற்குறிப்பிடப்பட்ட கால அளவீடுகளின் அடிப்படையில் வீடுகள் தெரிவு செய்யப்பட்டது. | குறித்த விலை கேள்வி நடைமுறையின் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்று நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வீடுகளை வாடகைக்கு எடுத்தல் இடம்பெறவேண்டும். |
| (உ) | 2004 அக்டோபர் 28 ஆம் திகதி 2004/ED/HE/45 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் விடுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு விடுதி வசதிகளை மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதற்காக நிதி ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கோ | 2005 ஆம் ஆண்டு முதல் அடிப்படையில் 502 மாணவர்களுக்கு விடுதி வசதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தை சுற்றிலும் விடுதி வசதிகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் விடுதி வசதிகளை வழங்க இயலும். மேலும் உபவேந்தர் கோரிக்கையின் அடிப்படையில் விடுதியினை நிர்மாணிப்பதற்கு | போதியளவான விடுதிகளை நிர்மாணிப்பதற்கும் ஆகக் குறைந்த கிரயத்தின் கீழ் விடுதிகளை வாடகைக்கு எடுப்பதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொருத்தமான இடம் ஒன்றினை இனம்கண்டு திட்டங்களை தயாரித்து அந்த திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வெளிவாரி தரப்பினரின் விடுதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக 2018 ஜனவரி முதல் 2022 பிப்ரவரி வரையான காலப்பகுதகாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 153,546,444 செலுத்தப்பட்டிருந்தது. | 2015 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை மேற்கொள்ளபடுவதுடன் அதற்காக இதுவரையிலும் சுமார் 12 ஏக்கர் பல்கலைக்கழகத்தை அண்மியதாக அமைந்துள்ள வேவத்த வஸ்ஸ காணியை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் காணிகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் சுமார் 2,000 மாணவர்களுக்கு விடுதிவசதிகளை வழங்குவதற்கு பல்கலைக்கழகம் எதிர்பார்க்கின்றது. | |

### 3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 7,827,099 கூட்டுத் தொகையான ஊவா கைத்தொழில் மத்திய நிதியம், உபவேந்தர் நிதியம் மற்றும் நலன்புரி நிதியம் ஆகியன மீளாய்வாண்டினுள் குறித்த நிதியங்களை நிறுவியமைக்கான நோக்கங்களுக்காக பயன்படுத்த பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் நிலவிய COVID செயற்திட்டம் காரணமாக சுமார் இரண்டு வருட காலம் உரியமுறையில் பல்கலைக்கழகத்தின் பணிகளை மேற்கொள்ள முடியாது இருந்ததுடன் எதிர்வரும் வருடத்தில் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றோம். | குறித்த நிதியத்தினை தாபிக்கும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்த வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கப்பட்ட செயற்திட்ட முகாமையாளர் பதவிக்காக 2017 செப்டம்பர் 24 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததுடன் தகைமை வாய்ந்த விண்ணப்பதாரி ஒருவரேனும் விண்ணப்பித்திருக்கவில்லை. | செயற்திட்ட முகாமையாளர் பதவிக்காக எதிர்காலத்தில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட உள்ளது. | பல்கலைக்கழகத்திற்கு தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறான போதிலும் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த பதவிக்காக தகைமை வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பயிற்சி பெறும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் II தரம் "ஆ" தொகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் நடைமுறைக்கமைய தகைமைகளை பூர்த்தி செய்திராத உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டு 2016 ஏப்ரல் முதல் 2020 அக்டோபர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 3,108,324 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | • அவரால் சமர்ப்பிக்கப்பட்ட கா.பொ.த உயர்தர பெறுபேற்று ஆவணத்தில் முரண்பாடுகள் காணப்படுகின்றமையாலும் பயிற்சிபெறும் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு உரிய அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திராமையால் 156 ஆவது கட்டுப்பாட்டுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் அவர் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.<br>• 2021.03.26 ஆம் திகதி இடம்பெற்ற 161 ஆம் கட்டுப்பாட்டுச் சபையின் தீர்மானத்தில் அவருக்கு இதுவரை வழங்கிய அனைத்து சம்பளம், வேதனம் மற்றும் படிகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாகும். அதற்கமைய உதவி தொழில் ஆணையாளருக்கு அறிவித்து கிடைக்கும் பதிலுடன் குற்ற புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் இணைத்துக்கொள்ளப்படும் அனைத்து உத்தியோகத்தரினதும் கல்வி சார் தகைமைகள் 03 மாதங்களினுள் உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மனிதவள பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டியதுடன் அவர்களின் கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் உரிய காலத்தில் சான்று படுத்தப்பட வேண்டும். |